www.Padasalai.Net www.CBSEtips.in



# ஆதவா சமூக அறிவியல்

## காலாண்டு மாதிரி வினாத்தாள்

வகுப்பு - 10

கால அளவு : 15 நிமிடம் + 3 மணி மதிப்பெண்கள்: 100

பகுதி-1

**I. அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14**

1. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள
2. தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவர் ____________
   அ) நெல்சன் மண்டேலா ஆ) ஸ்மட்ஸ் இ) ஹெர்சாக் ஈ) லெனின்
3. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?
   அ) க்வாடல்கெனால் போர் ஆ) மிட்வே போர்
   இ) லெனின்கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன்போர்
4. செப்டம்பர் 1949 இல் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எந்த நகரில் கூடியது?
   அ) ஷாங்காய் ஆ) கான்டன் இ) சிங்கப்பூர் ஈ) பீகிங்
5. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?
   அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927
6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ............
   அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்
7. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ....... ஆகும்
   அ) சமவெப்ப கோடுகள் ஆ) சம மழைக்கோடுகள்
   இ) சம அழுத்தக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்
8. இந்தியாவில் தேயிலை அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம் ______
   அ) அசாம் ஆ) தமிழ்நாடு இ) கேரளா ஈ) மேற்கு வங்காளம்
9. இந்திய மாங்கனீசு தாது நிறுவனத்தின் தலைமையிடம் அமைந்துள்ள இடம் .........
   அ) நாக்பூர் ஆ) ஹைதராபாத் இ) அலகாபாத் ஈ) ஜெய்ப்பூர்
10. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து.
    அ) சாலைப் போக்குவரத்து ஆ) இரயில் போக்குவரத்து
    இ) வான்வழிப் போக்குவரத்து ஈ) நீர்வழிப் போக்குவரத்து
11. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?
    அ) வம்சாவளி ஆ) பதிவு இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்
12. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்.............
    அ) குடியரசுத் தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
    இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்
13. GDP யில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?
    அ) வேளாண்துறை ஆ) தொழில்துறை
    இ) பணிகள் துறை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
14. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்?
    அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குநர்
    இ) துணை தலைமை இயக்குநர் ஈ) இவற்றில் எதுவுமில்லை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி –II

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10x2=20**

**ii) 28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

15. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?
16. இந்தோ - சீனாவில் நடைபெற்ற வெள்ளை பயங்கரம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
17. பன்னாட்டு நிதியமைப்பின் [IMF] நோக்கங்கள் யாவை?
18. சுவாமி தயானந்த சரஸ்வதி முன் வைத்த நேர்மறையான கொள்கைகள் யாவை?
19. தக்காண பீடபூமி குறிப்பு வரைக.
20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளை பட்டியலிக.
21. கலப்பு வேளாண்மை என்றால் என்ன?
22. நிலக்கரியின் வகைகள் அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
23. தேசிய அவசரநிலை என்றால் என்ன?
24. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.
25. உயர் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீவிர் புரிந்து கொண்டதென்ன?
26. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
27. உலகமயமாக்களின் வகைகளை எழுதுக.
28. பசுமைப் புரட்சியில் இந்திய உணவுக் கழகத்தின் [FCIயின்] பங்கு என்ன?

## பகுதி –III

**குறிப்பு: i) எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10x5=50**

**ii) 42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

i. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ________ ஆவார்.

ii. _________ இல் மத்திய அமெரிக்கா மெக்சிகோவிடம் இருந்து பிரிந்தது.

iii. 1919 ஜூனில் கெயெழுத்தான __________ உடன்படிக்கையோடு முதல் உலகப்போர் முடிவுற்றது.

iv. நவீன சீனாவின் தந்தை ___________

v. ________ 'சாக்கிய பௌத்த சங்கம்' எனும் அமைப்பை நிறுவினார்.

30. முதல் உலகப் போரின் விளைவுகள் யாவை?
31. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
32. இந்திய சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகாளந்தரும் ஆற்றிய தொண்டினை திறனாய்வு செய்க.
33. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
34. தென்மேற்குப் பருவக்காற்று குறித்து எழுதுக.
35. அ) வேறுபடுத்து: அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்

    ஆ) காரணம் கூறுக: மலைப்பகுதிகள் சமவெளிகளை விடக் குளிரானவை.
36. இந்தியா எத்துறையில் உலகில் இரண்டாம் இடத்தில் உள்ளது.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஆய்க.
39. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
40. உலக மயமாக்கலின் சவால்களை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**குறிப்பு: பார்வை மாற்றுத் திறனாளி மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.**

41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.

1910 முதல் 1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

**42. உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளைக் குறிக்கவும்.**

1. பல்கேரியா
2. செர்பியா
3. ஆஸ்திரிய-ஹங்கேரி
4. கிரீஸ்
5. ஜெர்மனி

## பகுதி – IV

**குறிப்பு: இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2x8=16**

**குறிப்பு: பார்வை மாற்றுத் திறனாளி மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.**

43. ஐரோப்பியக் குழுமம் எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.

(அல்லது)

(i) தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.

(ii) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

i. காரகோரம் மலைத்தொடர்
ii. சிந்து
iii. மாளவ பீடபூமி
iv. கிழக்கு கடற்கரை சமவெளி
v. தென்மேற்கு பருவகாற்று வீசும் திசை
vi. கஞ்சன்ஜங்கா
vii. சணல் விளையும் பகுதி
viii. வடக்கு இரயில்வே தலைமையகம்

**(அல்லது)**

i. கங்கை - பிரம்மபுத்திரா டெல்டா
ii. அதிக மக்கள் தொகை மாநிலம்
iii. மலபார் கடற்கரை
iv. துங்கபத்ரா அணை
v. மும்பை விமான நிலையம்
vi. இந்தியாவின் மான்செஸ்டர்
vii. சோழ மண்டலக் கடற்கரை
viii. பாலை மண் பகுதி

# ANSWER KEY

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. அ | 3. இ | 5. ஆ | 7. ஆ | 9. அ | 11. இ | 13. இ |
| 2. ஆ | 4. ஈ | 6. இ | 8. அ | 10. இ | 12. அ | 14. ஆ |

**15. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரம்**

1. முஸ்தபா கமால் பாட்சா துருக்கியை **நவீன** மயமாக்கினார்.
2. அதை எதிர்மறையான அங்கீகாரத்தில் இருந்து மாற்றியமைத்தார்.
3. துருக்கி மீண்டும் ஒரு நாடாக **மறுபிறவி** எடுக்க முக்கிய பங்காற்றினார்.

**16. இந்தோ - சீனாவில் நடைபெற்ற வெள்ளை பயங்கரம்**

1. 1929 இல் வியட்நாம் வீரர்கள் **ராணுவப் புரட்சி** செய்தனர்.
2. பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலை செய்வதற்கான முயற்சி தோல்வி அடைந்தது.
3. **விவசாயிகளின்** புரட்சியும் நடைபெற்றது. இப்புரட்சி ஒடுக்கப்பட்டது.
4. வெள்ளை பயங்கரவாதம் என்பது அரங்கேறியது.
5. புரட்சியாளர்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர்.

**17. பன்னாட்டு நிதியமைப்பின் [IMF] நோக்கங்கள்**

1. நீடித்த பொருளாதார வளர்ச்சி.
2. வேலை வாய்ப்பினைப் பெருக்குவது.
3. உலகம் முழுவதும் **வறுமையை ஒழிப்பது.**
4. நிதி நிலையை உறுதியானதாக வைத்திருப்பது.
5. பன்னாட்டு வணிகத்திற்கு **வசதிகள்** ஏற்படுத்திக் கொடுப்பது.

**18. சுவாமி தயானந்த சரஸ்வதி முன் வைத்த நேர்மறையான கொள்கைகள்**

1. கட்டுப்பாடான ஒரு **கடவுள்** வழிபாடு.
2. உருவ வழிபாட்டை நிராகரித்தல்.
3. பிராமணர் மேலாதிக்கம் செலுத்தும் சடங்குகள், சமூக நடைமுறைகள் ஆகியவற்றை மறுத்தல்.

**19. தக்காண பீடபூமி**

1. பரப்பளவு **7 லட்சம்** சதுர கி.மீ.
2. இது மேற்கிலிருந்து கிழக்காக சரிந்துள்ளது.
3. **தோராயமாக முக்கோண** வடிவம் கொண்டது.
4. **உயரம்** - கடல் மட்டத்திலிருந்து **500 மீ முதல் 1000 மீ வரை.**
5. மலைகள், ஆறுகள், காடுகள் என மிகப் பெரிய இயற்கை அமைப்பை உடையது.

**20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்**

1. அட்சங்கள்
2. கடல் மட்டத்திலிருந்து உயரம்
3. கடலில் இருந்து அமைந்துள்ள தொலைவு
4. பருவக்காற்று
5. நிலத்தோற்றம்
6. .ஜெட் காற்றுகள்

**21. கலப்பு வேளாண்மை**

1. பயிர் சாகுபடி மற்றும் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கியது கலப்பு வேளாண்மை எனப்படும்.
2. விவசாயிகளின் பல தேவைகளை இது பூர்த்தி செய்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

22.

| வ.எண் | நிலக்கரியின் வகைகள் | | கரிம அளவுகள் |
|---|---|---|---|
| 1 | ஆந்தரசைட் | - | 80 முதல் 90 % |
| 2 | பிட்டுமினஸ் | - | 60 முதல் 80 % |
| 3 | பழுப்பு நிலக்கரி | - | 40 முதல் 60 % |
| 4 | மரக்கரி | - | 40 % த்திற்கும் குறைவு |

**23. தேசிய அவசரநிலை**

1. போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து காரணமாக இந்தியாவின் **பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்** ஏற்படும்போது குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்படுவது தேசிய அவசரநிலை எனப்படும்.
2. இது அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352 இன் கீழ் அறிவிக்கப்படுகிறது.

**24. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள்.**

1. இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் **வழக்காடும் உரிமை.**
2. நாடாளுமன்ற இரு அவைகளிலும் பேசுவதற்கும், பங்கேற்பதற்கும் உரிமை.

**25. உயர் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டு அதிகாரங்கள்**

1. தன்னிடம் வரும் உரிமையியல், குற்றவியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரித்தல்.
2. கீழ் நீதிமன்றங்கள் அனுப்பி வைக்கும் மேல் முறையீட்டு வழக்குகளை (உரிமையியல், குற்றவியல்) விசாரித்தல்.
3. இராணுவத் தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்க இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

26. **தனி நபர் வருமானம்**

1. மக்களின் **வாழ்க்கைத் தரத்தை** உணர்த்தும் ஒரு **கருவி.**
2. நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் பெறப்படுகிறது.

$$\textbf{தனி நபர் வருமானம்} = \frac{\textbf{நாட்டு வருமானம்}}{\textbf{மக்கள் தொகை.}}$$

**27. உலகமயமாக்களின் வகைள்**

1. தொன்மையான உலகமயமாக்கல்
2. இடைப்பட்ட உலகமயமாக்கல்
3. நவீன உலகமயமாக்கல்

**28. பசுமைப் புரட்சியில் இந்திய உணவுக் கழகத்தின் (FCIயின்) பங்கு**

1. உணவு தானிய உற்பத்தியில் **தன்னிறைவு** பெற வழி வகுத்தது.
2. **குறைந்தபட்ச ஆதரவு விலையில்** தானியங்களை அரசு கொள்முதல் செய்கிறது.
3. உணவு தானியங்களை **சேமிப்புக் கிடங்கில்** வைத்து ஆண்டு முழுவதும் வழங்குகிறது.

29. i. கிளமென்சோ
ii. 1821
iii. வெர்செய்ல்ஸ்
iv. டாக்டர்.சன் யாட் சென்
v. அயோத்தி தாசர்

AADHAVAA
www.Padasalai.Net